1264

# மங்கையர்க்கரசியார்

"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர் திருக் குலக்கொழுந்து வளைக்கைமானி,
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை,
எங்கள்பிரான் சண்பையர்கோ னருளி னாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழலெம்மாற் போற்ற லாமே"

இறைவனாற்றலா லியங்கும் இப்பூவுலகு தோன்றிய நாள்தொட்டு இந்நாள்காறும் தொடர்ந்துவரும் மக்கட் தொகுதியுள் அவ்வக் காலங்களிற் தோன்றி, விரிந்த அறிவும் பரந்த நோக்கமும் உடையராய்ப் பல்திறப்பட்ட அரும்பெருஞ் செயல்களை ஆற்றி முடித்த பேரறிஞர் களும் அருளாளர்களும் பற்பலர். அவருள் மூவேந்த ரால் முப்பிரிவுகளாக ஆளப்பட்ட தமிழகத்தின் இரு பிரிவுகட்கும், உலகின் சமபாதியாக அமைந்த பெண்கள் குலத்திற்கும் அரசியாக விளங்கிய மங்கையர்க்கரசியாரும் ஒருவர். இவர் பொதுவாகச் சைவமக்களெவருஞ் சிறப் பாகப் பெண்பாலாரு மென்றுந் தெய்வமாகப் போற்றும் அளப்பரும் பெருமைவாய்ந்தவர். இவராற்றிய அரும்பணி யும் அத்தகையதே. மக்கட்கூட்டத்தார் பகுத்தறிவிழந்து இருட்பிழம்பி லழுந்திப் பிறவிவட்டத்திற் பன்முறையுஞ் சுழலாது, அவர்க்கு அறிவொளி பெருக்கி மெய்யுணர் வளித்தலே ஒருவர் ஆற்றும் அறங்களுளெல்லாஞ் சிறந்த பேரறமும் அரும்பணியுமாகும். பெண்பாலாருள் இவ்வற நெறியிற் றலைசிறந்து நின்ற திருவினையுடையார் மங்கை யர்க்கரசியார். மக்களின் அறிவுவளர்ச்சிக்கு அடிப்படை யானது சமயநெறியே. மக்களைச் சமயத்தின் உண்மை ஒழுக்கத்தில் நிறுத்தியவர் அவர்களின் பிறவி நோக்கத் தை நிறைவேற்றியவரே யாவர். இவ்வம்மையார் ஆற்றிய அறத்தின் பெருமை கண்டே சேக்கிழார் சுவாமிகள்

இவரைத் தாம் வழிபடுந் தெய்வமாகக் கொண்டதூஉம், சம்பந்தப்பிள்ளையார் தமது தேவாரத்திற் பலபட சிறப்பித்துப் பாராட்டியதூஉமாம். இவரின் சரிதம் ஆசிரியர் சேக்கிழார் பெருமானால் ஆக்கப்பெற்ற பெரியபுராணத்துட் கூறப்படும் அறுபத்துமூன்று மெய்யடியார்களின சரிதங்களுள் ஒன்றாகும். இவரது வரலாற்றினைத் திருஞானசம்பந்தப்பிள்ளையார் புராணத்தில் ஆசிரியர் விரிவாகக் கூறியுள்ளாரெனினும் இவர் சுந்தரமூர்த்தி நாயனாரால் துதிக்கப்பெற்ற அடியார்களுள் ஒருவராதல்பற்றி, பொருள் பொதிந்த மூன்று அழகிய செய்யுட்களால் இவர்க்கோர் தனிப்புராணமும் வேறாக வகுத்தனர். பெரியபுராணத்தால் மட்டுமன்றி இவரோ டொருகாலத்திருந்து இவரை நேரே கண்டறிந்த ஞானவள்ளலாகிய சம்பந்தப்பிள்ளையாரது தேவாரத் திருவாக்குகளாலும், இவரது முற்றறிவும் தொண்டின் சிறப்பும் அறியக்கிடக்கின்றது. காழிவேந்தர் இவரிற் கொண்ட அன்பின்பெருக்கு அளவிடற்கரிது. அதனை ஆலவாய்ப் பதிகத்தில் அம்மையாரைக் குறிக்கும் பாடல்களில், அவரது அருள் கொழித்தெழுந்த விழுமிய சொற்களே தெரிக்கும். அருள்பழுத்த பிள்ளையாரது ஞானம் பொழியும் தூயவாக்காற் பேசப்படுந் தவத்தினராய அம்மையாரின் எல்லையற்ற அறிவு, மக்களின் சிற்றறிவிற் கெட்டாத் தகைமையது. அதனைப் "பூசுரர் சூளாமணியாம புகலிவேந்தர் போனகஞானம் பொழிந்த புனிதவாக்கால், மேதகவுடைய பாடல்பெறுந் தவத்தினரைச் செப்புவதியா மென்னறிந்து" என ஆசிரியரே வியந்துள்ளார்.

இவர், தமது பணியினால் இருபெரு நலங்களை எய்துவித்த தனிப்பெருந் தலைவியாவர் என்பதாகவே, இவரது புராணத்தின் முதற் செய்யுளில் "தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப்பாவை" "இருந்தமிழ் நாடுற்ற விடர்நீக்கித் தங்கள் பொங்கொளி வெண்திருநீறு பரப்பினார்" என்னும் வரிகளால் ஆசிரியர் காட்டுகின்றனர். தன கணவனால் அவன் குலமடைந்த பழியினைத் துடைத்தும், நாடடைந்த இடரினை நீக்கியும தன் கற்பின் கடமையையும் அருட்பணியையும் ஒருங்கே முற்றுவித்த இப் பெ

ளூர் தகையாரது சரிதம் எக்காலத்தும் எவரது ஆராய்ச்சிக்கும் உண்மை திரியாது நிலைநிற்கும் வலிமையுடையது. சீர்காழித் தலைவரின் பெருஞ் சான்றுடன் விளங்குவது. கற்குந்தோறும் புத்துணர்வளிக்கும் பெற்றியது.

தான் பிறந்த அகத்தையும் புகுந்த குலத்தையும் புகழ்பட விளக்கிய இவ்வருட் செல்வியார், தமிழகத்தின் பேரரசாகச் செங்கோலோச்சிய மூவேந்தருள் ஒருவரான சோழ மன்னனின் செல்வப் புதல்வியாவர். வளவர்கோன் திருவுயிர்த்தருளிய இத் தெய்வப்பாவை, தென்னாட்டு மன்னனாகிய பாண்டியன் நெடுமாறனுக்கு மணம் புகுத்தப் பட்டார். வீட்டின்பத்தினைப் பெறுதற் கவாவுவோர் செல்லும் நன்னெறிகளாகச் சைவசமயத் தறிஞர்களாற் காட்டப்பெற்ற துறவறம் இல்லறமாகிய இரு பெருநெறிகளுள், அரசியார் இல்லற நெறியைத் தழுவி, அதன் பண்பும் பயனுமாகிய அன்பும் அறனும் பெருக்கித் தம் வாழ்வினைப் பண்படுத்தி, அருளொழுக்கத்திற் றலைநின்றார். செல்வப் பேற்றிலும் அறிவின் பெருக்கத்திலும் குறைவுறாது நிறைவுற்று வாழ்ந்த இப்பெருந் திருவினையார், தாம் உலக நிலையிற் பெற்ற உயர்விலும் அறிவு நிலையிற் பெற்ற உணர்வு மிகுந்து, தமது மன்னர் பதவியிலும் மயங்கா மனத்தினராய், ஆன்மாக்களை ஐந்தொழிற் படுத்து ஆட்கொள்ளும் இறைவன் திருமலர்ப் பதங்களைப் பற்றுவதிலேயே தன் கருத்து முனைக்கப் பெற்றார். வீட்டின்பத்தைப் பெறுதலொன்றே, பற்றற்ற தூய உள்ளமும் தெய்வ ஒளிவீசும் மெய்யறிவும் படைத்த இவரது உயிர் நாடியாக இருந்தது. பிற உயிர்களையும் அறநெறி நிறுத்தும் பெரும் பணியையே இவர் தனது இல்வாழ்வின் இலக்காகக் கொண்டார்.

சோழமன்னனின் குலக்கொழுந்தாமிவர் பாண்டிய அரசனின் மனைத்திருவாகி, அன்பெனும் அரும்பவிழ, அறிவெனும் மணங்கமழத் தம் தெய்வ வாழ்வினை வளர்த்துவரும் நாளில் அதன் வளர்ச்சியினைத் தடுத்து வேரொடு பறித்தெறியும் சமணமாகிய கொடும்புயலினாற் பெரிது மிடருற்றார். இவரது இல்வாழ்விற்கு அச்சாணிபோன்

துள்ள அரசன், தனது பிறப்புரிமையாகிய சைவ ஒழுக்கத்தைக் கைவிட்டுச் சமண ஒழுக்கத்தில் தலைப்படலானான். அவன் முற்பிறப்பி லாற்றிய தீவினையின் பயனாக "அந்நெறிச் சார்வுதன்னை அறமென நினைந்து" தன் மதமாம் சைவம் விடுத்துச் சமண்மதம் புகுந்தான். "அரசனெவ்வழி குடிகளு மவ்வழி" என்பதற் கிணங்க அந்நாட்டுக் குடிகளிற் பலரும் அம்மதம் பற்றினர். சைவ ஒழுக்கத்தின நல்லியல்பு எங்குமொழியக் கைதவம்மிக்க அமண் சமயத்துப் பொய்யொழுக்கமே பரவ அதனாற் பாண்டிநாடு கலங்கியது. தமிழ்நாடாகிய பாண்டிநாட்டிலுள்ள புகழோங்கிய பதிகளெல்லாம் பாழியும் அருகர் மேவும் பள்ளிகளுமேயிருந்து, முண்டிதஞ் செய்யப்பட்ட தலையும் பாயுடையும் மயிற்பீலியுமுடைய அமணர்களே நெருங்கி மொய்த்தனர். தென்னாட்டின் இருளினை யோட்டுந் திருவிளக்கனைய தேவியாரிடத்தும் அந்நாட்டு மந்திரியாராகுங் குலச்சிறையாரிடத்துமன்றிச் சைவம் அங்கு மற்றெவரிடத்து மின்றி மறைந்து போயிற்று. வழிமுறையாக வந்த உயர்நெறி விலகி இடையே செய்முறை தப்பிய தன் கணவனால், தென்னர்குல முற்ற பழி யொருபுறமாகவும், நீற்றொளி மங்கி அறிவொளி குன்றிப் பிழைநெறிப் பட்டுத் தமிழ் நாடுறு தீங்கு மறுபுறமாகவும், அம்மையாரை வருத்தவே அவர் எதுவுந் தெளியாத சிந்தையராய்த் தீராத் துயரடைந்தனர். தனதில்வாழ்வின் தலைவனாகவும் குடிகளின் மன்னனாகவும் நின்று முறைசெய்து நன்னெறியைக் காப்பாற்றுங் கடப்பாடுடைய மன்னன் அதினின்றும் வழுவி நவைநெறிப்பட்டுத் தன் குலத்திற்கும் நாட்டிற்கும் இழைத்த பழியினையுந் தீங்கினையு முணர்ந் துணர்ந் துளம்நைந்தனர். மனதி லடங்காத் துயருடன் அம்மையார் உறுதிபயக்கும் சைவ ஒழுக்கத்தினைத் தளராது தான் தனிமையாகத் தாங்கி அருமையாகக் கொண்டு செலுத்தினார். திருவருளிற் படிந்த உளத்தினர் எவ்விடர் வந்துற்ற காலத்தும் முழுமுதற் பரம்பொருளொன்றினைத் தவிர மற்றைத் தெய்வங்களைக் கனவிலுங் கருதாரென்பதை, அரசியார் மன்னனும் நாடும் மாறிய காலத்தும் தான் சைவச் செந்நெறியிற் சிறிதுந் திறம்பாது நின்று காட்டியுள்ளார்.

IYER LIBRAR

"கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடியாரொ டல்லால் நரகம் புகினும்
எள்ளேன் திருவருளாலே யிருக்கப்பெறி னிறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்களுத்தமனே"

என்றார் மணிவாசகப்பெருமானும். உண்மை நெறிநின்று தம்மறிவில் தெய்வஒளி விளங்கப்பெற்ற அம்மையார், படிற் றொழுக்கம் நிறைந்த பொய்நெறியாய அறநெறியாகப் பிழை பட மயங்கிய தன்கணவற்கு அவன் தழுவிய மதத்தின் பொய்மையினையும் சைவத்தின் வாய்மையினையும் நேரில் தெளிவாகக் காட்டி எவ்வாற்றானும் அவனையு மவனது நாட்டினையும் உய்யக்கொளல் வேண்டுமெனும் ஓர் கருத் துடன் அப்பணியையே தன் வாழ்வில் மேற்கொண்டார். தன் கணவன் பிழைநெறிப்பட்ட துயரினும் தமிழ் நாடு ற்ற கேடே அவரைப் பெரிதும் வருத்தியது. "தமிழ் நாடுற்ற தீங்கினுக் களவு தேற்றாச் சிந்தையிற் பரிவு கொண்டே" என ஆசிரியர் அரசியார் அதிலடைந்த துயரி னைத் தெளிவாகக் காட்டியுள்ளார். இவ்விடத்து அம்மை யாரது தாயன்பும் தெய்வக் கற்பும் பெரிதுஞ் சிந்திக்கத் தக்கது. அறிவு நிரம்பாக் குழந்தைகள் பிழையுற்றுப் படுந்துன்பினைக் கண்டு ஆற்றாதகனை அகற்ற முந்து மன் னையரேபோல் அம்மையார் தன்னிடத்துச் சுரந்து பெரு கிய தாயன்பினுளளங்கரைந்து, தன் நாட்டின ருற்ற கேட் டினைக் களைய முந்தினர். பெண்கலம் கனிந்த பிராட்டியார் தன் நாட்டினரின் இடரினைக் கண்டதும் நெகிழ்ந்த மன மும் கழிவிரக்கமும் பேரன்புமாகிய பெண்மைக் குணங்க ளாற் பெரிதும் ஈர்க்கப்பட்டார். அறத் தாற்றினின்று சிறிதும் நீதி உண்மை வழுவாது பெண்களாற்றும் இல் வாழ்வே கற்பின் மாட்சிமைப்பட்ட நெறியாகும். அற நெறிக்கமைந்த விதிவிலக்குகளை ஆய்ந்தறியும் நுண்ணறி வும், செயல்களைத் தெரிந்து கைடாளும் மதிநுட்பமும், அறந்திறம்பாது, தன் வாழ்வைத் திறம்பட ஓம்பும் வன் மையும், அறந்திறம்புமிடத்துத் தன் உயிரினுக்குமஞ்சாத மனத்திட்பமும், தீமைபயக்கும் கொடிய பவநெறிகளை அழித்து அறநெறியை நிலைநிறுத்தும் ஆற்றலும் அதன் உயரிய குணங்களாம். மக்கள் மணம்புகுந்து தமதில்வாழ் வினை நடாத்தும் ஒவ்வோர் நாளும், அளவற்ற தீமைகளா

லும் எண்ணற்ற இடர்களாலும் தாக்கப்படுகின்றனர். அவரிடத்து நன்மை தீமைகளைப் பகுத்துக் காணும் நுண்ணறிவும் அல்லவை நீக்கி அறத்தினை நிறுத்தும் ஆற்றலும் தம் வாழ்வினை நன்னெறியிற் செலுத்தும் வன்மையுமில்லையாயின், செலுத்துவாரின்றிக் கடலிடையல வசப்பட்டழியுங் கப்பல்போல அவ்வாழ்வும் பழி பாவம் வசை முதலிய தீமைகட்குள்ளாகி அழிந்துபடும். இல்வாழ்வின் தலைவன் தலைவியாகிய இருபாலாருட் பெண்பாலாரே மனைமாட்சிக்குப் பெரிதும் பொறுப்புடையாராதலின் இல்வாழ்வில் வந்துறும் தீங்கினைக் களைந்து செந்நெறிப்படுத்தும் பெண்களைப் பேரறிஞர்கள் கற்புக் கடம்பூண்ட பொற்புடைத் தெய்வங்களாகவே வணங்கிப் போந்தனர். அம்மையார் உலகெலாந் தமக்கீழ் அடிப்படுத்துவாழும் பேரரசியாக இருந்த போதிலுந் தமது அரசபோகங்களிலேனும் புகழ்படைத்த பெருவாழ்விலேனுந் தமமனம் மயங்கப் பெறாராய்த் தனதில்வாழ்வை அறநெறியிற் கொண்டு செலுத்துவதிலேயே கண்ணாக இருந்தார். அரசனது மதவேறுபாட்டால் அது இடருற்றதும் அவ்விடத்து உரம் பெற்று வளர்ந்த தெய்வக் கற்பின் சிறந்த குணங்கள் மேலோங்கித் திரும்பவும் அவ்வாழ்வை நன்னெறிப்படுத்த முயன்றன. "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்னுந் தெய்வப் புலவரின் திருவாக்கிற்கு அம்மையாரே இலக்காயினார்.

இனி அறவொழுக்கத்தினை மிகுத்துக்கூறுஞ் சமண மதத்தினை உறுதிபயக்கு முயர்மதமாக நம்பிய அரசன் அதனைப் பற்றிநின்றதலின் அதிலோர் குற்றமின்றாகவும் அம்மையாரதனைத் தம் குலத்திற்கும் நாட்டிற்குமுற்ற பழியுந் தீங்குமாகக் கொண்டு வருந்தியதும் அதனைமாற்ற முயன்றதும் எதனாலேயெனின்; மாறுபட்ட சமயங்களின் உண்மை பொய்மையினைப் பகுத்துக்காணும் பேரறிவின்றிப் பிழைபட்ட அரசனது மாற்றத்தால் விளைந்த பெருந்தீங்கினை அவர் முற்றுக உணர்ந்ததினாலேயாம். அரசனிடத்து அறத்தினைப் பெருக்கும் நன்னோக்கமிருந்ததாயினும் அதற்கேற்றவோர் உண்மைநெறியைக் காணும் நுண்ணறிவு குறைவுற்றே நின்றது. அம்மையாரது முயற்சியால் உண்மையை உணர்ந்தவிடத்து அவனும் அவரது நெறிக்குத்

திரும்பியதே அவன் தனது மயக்க அறிவினாலேயே முன் அம்மதம் பற்றினானென்பதை அறிதற்குப் போதுமானது. அறத்தினின்றும் வழுவாது, பொய், களவு, கொலை, முதலிய குற்றங்களைத் தன் நாட்டினின்று மகற்றி யாள்வதே அரசு ஆதலையும் அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நிற்கும் தனது செங்கோல் சிறிது பிறழினும் அதனால் விளையுந் தீங்கு மிகப் பெரிதாதலையும் அறியானாய் மூவேந்தராலும் அளப்பில் காலமாக அரிது முயன்று பாதுகாக்கப் பட்டதுந் தனது பிறப்புரிமையாயது மாயவோர் உண்மைநெறியினை யழித்துத் தவவேடத்தில் மறைந்து நின்று அல்லவை செய்யுங் கைதவம் நிறைந்த பொய்நெறியினைப் பரப்பியதே குலத்திற்கும் நாட்டிற்கு மவன் விளைத்த பழியுந் தீங்குமாம். மக்கட்கு அறப்பகுதியினை அறிவுறுத்தும் நன்னோக்கமாக முதலில் ஆதிஜைனம் எழுந்திருக்கலாம். ஆனால் அது நாளடைவில் உலகவியல்பிற்குப் பொருந்தாக் கொள்கைகளைக் கொண்டு வெறுங் கிரியையை அநுசரிக்கும் போலி மதமாக மாறியது. இயற்கையொடும் உண்மையொடும் பெரிதும் மாறுபட்ட உள்ளீடற்ற வெற்றுமதமே பாண்டி நாட்டிற் பரவிய சமணம். அது உலகத்து உயர்ந்தோர் பலராலுமுண்டென்று நாட்டப்பெறும் உண்மைப் பொருளாங் கடவுளைத் தமது புல்லறிவிற் கெட்டாத் தகைமையால் இல்லையென மறுக்கும் நாத்திக மதத்தைச் சேர்ந்தது. அறிஞர் கூறும் உறுதிப் பொருள்களைக் கொள்ளாது, தம் மனதிற் குகந்தவற்ற யெல்லாங் கூறித்திரியும் புல்லறிவாளரைத் தெய்வப்புலவர் "உலகத்தா ருண்டென்பதில்லென்பான் வையத்தலகையாய் வைக்கப்படும்." எனத் தம் யாக்கையைக் கரந்து மக்கள் யாக்கையிற் றிரியும் பேய் வடிவங்களாக ஒதுக்கினர். கடவுட் கொள்கையற்ற நாத்திகமதத்தினர் எவ்வறத்தினை யாற்றினாரேனும் தம்முடன் வேற்றின்று தமது வினைகட்கேற்பத் தம்மை இயக்கும் பூரணப் பொருளின் இறைமைத் தன்மையினை யுணர மாட்டாராதலின் தாம் மேற்கொண்ட அவ்வறத்தினும் நிலைநிற்கமாட்டாராய்க் கைநெகிழவிட்டு வெறுங்கிரியையாகமட்டுமே யதனைத் தாங்குவர். அன்பு, அருள், இரக்கம், சிவகாருண்யம் முதலிய நற்குணங்களால் அறிவினைப்

பண்படுத்தி மனதின்கண் மாசுநீக்கி வாழுந் தூயவாழ்வே அறமாகவும், அது செய்யாராய், வெளி வேடங்களாலும் வெற்றார வாரங்களாலும் தம்மை மாட்சிமைப்பட்ட தவத்தினையுடையர்போற் காட்டிப் பிறரை வஞ்சித்து வாழ்ந்தமையினாலேயே சமணர்களது ஒழுக்கங் கைதவம் நிறைந்த படிற்றொழுக்கமாக அருளாளர்களா லொதுக்கப்பட்டது.

“நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்துவாழ் வாரில் வன்கணா ரில்” என்பதே வள்ளுவப் பெரியாரின் வாக்காகும்.

குண்டிகை, பாயுடை, மயிற்பீலி முதலியவற்றைத் தவறாது தாங்குவதையே தம்மதத்தின் முக்கிய வேலையாகக் கொண்டனரன்றி வஞ்சனை, பொய், களவு முதலாந் தீக்குணங்களைத் தவிர்த்து அறிவினைத் தூய்தாக வளர்க்கும் அருளொழுக்கத்தை அவர் கைக்கொண்டிலர். சமண்மதத்தின் தலைவரான அடிகள்மாரே வஞ்ச நெஞ்சமும் பொய்யொழுக்கமும் நிறைந்த பதகராய், நாவுக்கரசர், சம்பந்தர் முதலாம் அருளாளர்களைக் கொல்லுதற்குப் பல சூட்சிகளைக் கையாண்டமையே, அந்நாளிற் சமணர் எத்தீவினைகட்கும் அஞ்சாத வன்னெஞ்சரா யிருந்தமைக்குச் சான்றும். கைதவம் மிக்க சமணம் பயக்குங் கேடு நோக்கியே சைவத்திருவாளர் அதனைப் புறப்புறச் சமயமாக ஒதுக்கியதூஉம் “அமண் கொடியோர் ஊத்தைவாய்ப் பறிதலையர், பொய்தவமாக் கொண்ட புன்தலைச் சமணர் வெங்தொழிலருகர்” எனப் பழிப்பதூஉமாயினர். இவர்களைமட்டுமன்று சைவத்தின் உண்மைப் பொருளினை அறியாது வெறுங் கிரியைகளையே சமயமாகக் கொள்ளுஞ் சைவர்களையும் இவர்கள் சமணரோடொப்பவே கண்டித்துள்ளார்கள்.

“எரிபெருக்குவ ரவ்வெரியீசன
துருவருக்கம தாவதுணர்கிலர்
அரிஅயற்கரி யானைஅயர்த்துப்போய்
நரிவிருத்தம தாகுவர் நாடரே.”

என்பதை யுள்ளிட்ட அப்பர்சுவாமிகளின் பல பாடல்களாலும் அதனை அறியலாம்.

மக்கள் தாம் சாதிக்கும் நெறியாற் கடவுளை அறியாராயின் அவர் அடையும் பயன் எதுவுமின்றாம். அறிவுருவாய் அதீதமாய் அருள்வடிவாய் ஆனந்த நிலையாயுள்ள உண்மைப் பொருளாங் கடவுளை அடையும் நோக்கமாகவே, உயிர்க்கூட்டங்கள் பிறந்து பிறந்து உழலுகின்றன. ஆணவ மலத்தினால் மறைக்கப்பட்டு அறியாமையாகிய இருட்பிழம்பிலமிழ்ந்திக் கிடக்கும் ஆன்மாக்களை, அகண்டித அறிவினனாகிய ஒப்பற்ற தனிமுதல்வன், அவற்றைப் பந்தித்த மலமறைப்பு நீங்கிப் பேரின்பத்தைப் பயக்கும் முற்றறிவினைப் பெறும் வரையில் பல்வகைப் பிறவிகளில் மென்மேலுஞ் செலுத்துகின்றான். அநுக்கக்கூறின் பாசத்தினாற் பந்திக்கப்பட்டு நிற்கும் உயிர்களை அதினின்றும் நீக்கிப் பதியொடு சேர்த்தலே அண்டசராசரங்களினியக்கத்தின் நோக்கமாகும். பதி, பசு, பாசமெனும் முப்பொருள்களின் இலக்கணங்களையும், பசு, பாசத்தினின்றும் நீங்கிப் பதியினை அடையும் முறையினையும் விரிவாகவும் தெளிவாகவும் விளக்கி, ஆன்மாக்களை அறிவு நெறியிற் செலுத்தி நிற்கும் சன்மார்க்கமே சைவமாகக் கொள்ளப்பட்டது. இவ்வுண்மை நெறியினிற்பவர் எம்மதத்தினரேனுஞ் சைவரேயாவர். சமயப் பகையின்றி நடுநின்று நோக்குவாரெவர்க்கும் உண்மை முடிபினைக் கொண்டது இவ்வுயர்நெறியே யென்பது புலனாகும்.

அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் இன்றியமையாது வேண்டப்பட்ட இந்நன்னெறியைப் பேணுவதே, தங்கள் முதற்கடமையாகத் தமிழகத்தரசர் கொண்டனர். மெய்யறிவின் வளர்ச்சியே அவர்களது செங்கோலின் உயர்ச்சியாக இருந்தது. தமிழகத்தின் செங்கோல் நெறியினையுந் தமது குலமுறையினையுஞ் சிறிதுந் தேராது அரசன் தன்மதம் விடுத்துப் பரமதம் புகுந்து பாண்டிய வரசனொருவனால் தமிழகத்தின் உண்மைநெறி அழிக்கப்பட்டுப் பொய்நெறி வளர்க்கப்பட்டதென்னும் பழிக்குத் தன்னையும் தன்குலத்தையு முள்ளாக்கினான். இதனால் அம்மையார் எவ்வாற்றானுந் தன் கணவனையும் உண்மைநெறிப் படுத்தி அப்பழியையும் நீக்க முயன்றார். அல்லதூஉம் தாயின் கருணையே மிகுந்த தேவியாரின் மனந் தமிழ்நாட்டினரின் தீங்கி[illegible] ...வர்களை உய்யக் கொள்ளும்

நோக்கமாகவும் அதனை மாற்ற முயன்றார். அருட்பெருக்கால் நனைந்து இளகிய அவரது மென் மனமானது அப்பணியை முற்றுவித்தற்குப் பெரிது முருகியது.

அம்மையார் தனது தூயவுணர்வின் பயனேயாகச் சைவத்தை விளக்குபவராகிய புகலிவேந்தர் திருமறைக்காட்டிற்கு வந்தாரென்னும் நற்செய்தியைக் கேட்டார். இதனைக் கேட்டதும் தன் மனதிலார்த்தெழுந்த மகிழ்ச்சி பொங்க, உதயகாலத் தலர்ந்த செந்தாமரைபோல் நகையரும்பும் முகத்தினராகித் தூரத்திருந்தாரேனும் அவரது திருவடிகளைச் சென்று வணங்கியவரை ஒத்து மகிழ்ந்தார். அளவுகடந்த அன்பினால் அம்மையார் பிள்ளையாரை வணங்கல் வேண்டுமென அவாவினர். அதனால் தன் பரிசனர்களை யழைத்துச் சிரபுரத்துப் பிள்ளையாரது செவ்விய பதங்களைப் பணிந்து எமது செய்தியை அவர்க்குக் கூறுங்களென மாமறைக் காட்டிற் கனுப்பினர். பிள்ளையாரது பெயரைக் கேட்ட வளவானே அம்மையாரது அன்பு அவரிற் பதிந்தமை பெரிதும் அவதானிக்கத் தக்கதாம். தம்மொடு நெருங்கிய தொடர்பையுடையாராய பெற்றார் உற்றார் சுற்றத்தார் மாட்டுத் தம மனம நெகிழப் பெறுவதே சாதாரண மக்களிடத்துக் காணப்படு மன்பாகும். இவரோ பிள்ளையாரை இதற்கு முன்னெப்போதாவது கண்டவருமல்லர். அவருடன் பழகியவருமல்லர். சைவத்தின் செந்நெறியை விளக்குபவரென அவரது தொண்டின் பெருமையை அறிந்ததே பிராட்டியாரது அன்பு அவரிடத்துச் சுரப்பதாயிற்று. இதுவே பற்றற்ற மெய்ஞ்ஞானிகளின் தூயமனதிற் றோன்றும் மெய்யன்பாம். இவர் சீர்காழித் தலைவரிடங் கொண்டுள்ள தாயன்பைச் சிவப்பிரகாச சுவாமிகள் உமாதேவியாரின் அருளுடன் ஒப்பிட்டு "உன் அழுகை கண்டாற்றாது பாலூட்டிய அருளம்மையாகிய அம்பிகையோ அன்றி உன் நிலை விளம்பக் கேட்டு அன்பினாற் பால் சுரந்த அரசியோ இவரில் யார் உயர்ந்தார்?" எனப் பிள்ளையாரைத் தன் செய்யுளால் வினவி யுள்ளார். திருக்களிற்றுப்படி ஆசிரியரும்

"சுரந்ததிரு முலைக்கே துய்ய சிவஞானம்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்ல—சுரந்த

தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையா ளென்பிருந்த வாறு''

என அவரது தாழ்ந்த மனமும் மெய்யன்பும் இருந்தவா றென்னே! என வியந்துள்ளார். ஞானபோனகரும் அம்மை யாரைக் காண்பதற்கு முன்னரே அவரிடத்து அளவற்ற அன்புடையராயினர். பாண்டிநாட்டின் அரசியாரால் அனுப் பப்பட்ட சிலர் வாயிலின் புறத்தே வந்துநிற்கின்றனரெ னக் கேட்ட மாத்திரையே சீர்காழித் தலைவர் அளப்ப ரும் அருள்சுரப்ப அகமலர்ந்தவராய்த் தனது பதங்களைப் பணிந்த அவர்களிடம் அம்மையாரது நலத்தையே உசாவி னர். இது பிள்ளையாரது அருளுடனும் முற்றறிவுடனும் அமைந்துநின்ற அம்மையாரது அருள் விளக்கத்தையும் வியாபக அறிவையுங் காட்டி இவர்களின் அனுக்க உரிமை யினைப் புலப்படுத்துகின்றது. பாண்டி நாட்டினின்றும் போந்த அறிஞர்களா லந்நாட்டின் செய்தியினை யறிந்த பிள்ளையார் உடனே அப்பதிக் கெழுந்தருளினூர். அப் போது அரசியார்க்கு மென்மேலும் நன்னிமித்த மெய்தி யது. சிவஞானச் செம்மலும் பாண்டிநாட்டைக் கிட்டினர். கவுணியர்பெருமான் தன்நாடு அணைந்தன ரென்பதைக் கேட்ட அருட்செல்வியார், தன்னையுமறியாது தழைத்துப் பொங்கிக் கைமிக்கோடிய அன்பு வெள்ளத்து ளமிழ்ந்திப் பெருமகிழ்வடைந்து அவரை எதிர்கொள்ளும்படி குலச் சிறையாரை ...னுப்பினர். அதன்பின் தான் ஆலவாயம ர்ந்த ஐயனை வணங்க வேண்டுமெனக் கொற்றவன் தனக் கும் கூறி ...ன் பரிசனங்கள் சூழ ஆலயத்தை யடைந்து பரம்பொருளைத் தொழுது பிள்ளையாரை நல்வரவேற்பக் காத்துநின்றூர். மந்திரியாரால் எதிர்கொள்ளப்பட்ட ஞான வள்ளலும் அம்மையார்க்குத் திருவருள்பெருக அருள் புரிந்து ஆலவாயை வணங்கி மங்கையர்க்கரசியென்றே தன் பதிகத்தைத் தொடங்கி அதில் அவரது திருப்ப ணியைச் சிறப்பித்தருளி ஆலயமடைந்தனர். அங்கு அவர்க்கெதிரே செல்லாது ஒருபுறமொதுங்கும் பிராட்டி யாரை மந்திரியாரால் அறிந்த பிள்ளையார் பெருங் களிப் புடன் விரைவாக அவரை அடைந்தனர். இவர்களிரு வரும் எதிர்ப்பட்ட இடத்து ஊற்றெடுத்த மெய்யன்பின் பெருக்கை ஆசிரியர் கல்லுங் கரைந்துருகக் காட்டுகின்ற

னர். பால்மணம் மாறாப் பசுங்குழவிப் பருவத்தினையுடைய சிவஞானக்கன்று தன்னைக் கிட்டியதும்

"தென்னவன் பெருந்தேவியார் சிவக்கன்றின் செய்ய
பொன்னடிக் கமலங்களிற் பொருந்த முன்வீழ்ந்தார்
மன்னுசண்பையர் வள்ளலார் மகிழ்சிறந் தளிக்கும்
இன்னருட்பெருஞ் சிறப்புடன் திருக்கையா லெடுத்தார்"

புகலிவேந்தரை வணங்கிய அரசியார் தன் மனக்கருத்து முற்றியதென மகிழ்ந்தவராய்த் தன்மாட் டார்த்தெழு மன்பினாற் கண்களினின்றும் நீர் பெருக வாய்குழறிப் பெருமானது வருகைக்கு யானு மென் நாடு மென்ன தவத்தினைச் செய்தேமென உருகினர். பிள்ளையார் "சூழ்ந்துள்ள பரசமயத்தினிடையும் திருத்தொண்டிற் றிறம்பாது வாழுந் தன்மையுடையராய உம்மைக் காணவே வந்தனம்" என்றார்.

தேவியார் தனது மனக்கருத்து முற்றியதென்றதே தனையெனக் காண்பாருக்குச், சமணம் தன் நாட்டிற் பரவிய நாள்தொட்டு அப் பொய்ந்நெறியினின்றுந் தன் கணவனையும் நாட்டினையும் உய்யக்கொள்ள வேணுமென்பது தொன்றிலேயே கருத்தாக வாழ்ந்தாரென்பது புலனாகும். அவர் கவுணியர் தலைவனைக் கண்டதும் தன் பணி முடிந்ததாகவே மகிழ்ந்து அவரைப் பன்முறை பணிந்து ஆனந்த பரவசராய்த் தன் மாளிகை சேர்ந்தனர். பிள்ளையாருங் குலச்சிறையாரால் காட்டப்பெற்ற திருமடத்திற் கெழுந்தருளி அங்கிருந்தார்.

சம்பந்தர் வருகையும் சிவனடியார்கள் முழக்கமும் சமணர்கட்குப் பெரிதும் பொறாமை யூட்டவே அவர்கள் ஒருங்கே திரண்டு மன்னனிடஞ் சென்று காழியர் கோனின் வருகையையும், அவர் தம்மை வாதில் வெல்வதற்கே வந்தாரெனத் தாம் கேள்வியுற்ற செய்தியையும் தெரிவித்தார்கள். மன்னன் அதற்கென்செயலாமென வினவ, அவர்கள், அச்சிறுவனை வலிந்து துரத்துதல் கூடாதெனவும் அவரிருக்கு மிடத்திற்குத் தங்கள் மந்திரவலியாற் றீயிட்டால் தானே ஓடிவிடுவாரெனவும் கூறவே அவனுமதற்

குடன்பட்டான். அரசன் செய்யத்தக்க தொன்றேயானால் அதனை விரைவாகச் செய்யுங்களென அவர்களை அனுப்பிய பின் எவருடனும் உரையாடாது பெருங் கவலையுடன் அந்தப்புரத்தை யடைய அம்மையாரும் அங்கு வந்துற்றனர். தன் தலைவன் ஏதுவு முரையாடாதிருப்பதைக் கண்ட மாதேவியார் அவனை நோக்கி

"என்னுயிர்க் குயிராயுள்ள இறைவ! நீயுற்ற தென்னோ?
முன்னுள மகிழ்ச்சியின்றி முகம்புலர்ந் திருந்திருந்தா யின்று
பன்னிய உள்ளத் தெய்துதும் பருவரல் அருள்செய்"

என அன்புததும்ப வேண்டினர். அதற்கவன் "சங்கரனருளைப்பெற்ற ஓர் சைவச் சிறுவன் அடிகண்மாரை வாதினில் வெல்தற்குப் பல சிவனடியார்களுடன் இங்கு வந்துள்ளானாதலால் அவர்களைக் கண்டு அடிகண்மாருக்கும் அதனைக்கேட்டு எனக்கும் முட்டுண்டாயிற்று. இதுவே என் கவலை." என்றனன். இதனைக் கேட்ட தேவியார் தெய்வத்தன்மை வாய்ந்த அவர்கள் வாது செய்வாராயின் எவர் வெற்றியுறுவரோ அவர் பக்கஞ் சேர்வதே நீதியாகும். அதற்காக வருந்தல் வேண்டாமெனத் தேற்றிவிட்டுக் கழுமலப் பெருமான் தங்களை ஆளும்பொருட்டு எழுந்தருளினரோவென மகிழ்வொடு போயினர். அவ்விடத்து மந்திரியார் வந்து தன் கைகளைத் தலைமேற் குவித்து அம்மையாரை வணங்கிநின்று பிள்ளையார் எழுந்தருளப் பெற்றதாற் பெறுதற்கரிய பேற்றினை அடைந்தோமாயினும் சமணர்கள் என்ன வஞ்சனைகளைச் செய்வரோ அறியோம் என்றார். கொடுமை படைத்த சமணர்களின் வன்னெஞ்சினை நன்றாக அறிந்த அம்மையார் அச்சமிகுந்து, படிற்றொழுக்கம் நிறைந்த அவர்கள் பெருந்தீங்கே செய்வாராதலின் தாமதற்கு யாது செயலாமெனப் பெரிது மேங்கி, அவர்க்கு ஊனம் வந்தடையிற் றாமும் உயிர்துறந் தொழிவதே செய்யத்தக்கதென உறுதி செய்து கொண்டார். இதில் அம்மையாரது மனத்திட்பம் குறிப்பிடத்தக்கது. எல்லாவற்றினுந் தம்முயிரே தமக்கு இனியவாதலின் மற்றையோரிடர்கண்டு தம்முயிர் நீப்பார் இவ்வுலகில் எவருமிலர். தம்முயிரினும் இனிதாய உண்மைப் பொருளினைப் பற்றி நிற்கும் முற்றறிவுடையரே தம் அன்

பிற்குரியரடையும் அவலம் பொறுது தாம்முயிர் நீக்கும் ஆற்றலர் தாமால் வழைப்பிக்கப்பட்ட பிள்ளையார்க்குச் சமணர் தீங்கிழைப்பரோ என நினைந்ததும் அம்மையாரது மெய்யுணர்வு அங்ஙனம் நேருமாயின் அதன்பின் உயிர் தாங்க மறுத்தது.

பாண்டியனிடம் விடைபெற்றுச் சென்ற அருகர் ஞானவள்ளலாரும அவரைச் சேர்ந்த சிவனடியார்களும் இருந்த திருமடத்தில் தீப்பற்றும்படி மந்திரங்களைச் செபித்தும் அது பற்றாமைகண்டு வருந்தி, இதனை அரசன் அறிவானாயின் தம்மையும் மதியாது நமது மதவிருத்தியையு மொழிப்பானென அஞ்சித் தீயினைக் கொண்டு சென்று திருமடத்தில் மூட்டினர். தீப்பற்றுவதைக் கண்ட அடியார்கள் பதைபதைத்து அதனைத் தணித்து விட்டுப் பிள்ளையாரிடம் நடந்ததைக் கூறினர். அவர் சிவனடியார்கள் துயிலும் திருமடத்தினைப் பாவிகள் பழுது செய்ததற் கிரங்கி "இது அரசாட்சியின் வழுவினால் நேர்ந்தமையின் இக்கொடிய தீங்கானது அரசன்மேற் செல்வதே முறையா"மென முனிந்தாரேனும், அரசியாரது வாழ்வினை நினைந்தவராய அவரின் மங்கலநாணைப் பாதுகாத்து, "சைவர்வாழ் மடத்து அமணர்களிட்ட தீத்தழல் போய்ப், பையவே சென்று பாண்டியற்கா"கெனப் பணித்தார். அது பாண்டியனை வெப்புநோயாயடைந்து வெதுப்பியது. "அறனிழுக்காத லல்லவைநீக்கி மறனிழுக்கா மானமுடைய தரசு" ஆகவும் அரசன் சிறிதும் மனங்கூசாது பாதகங்களுள் தலையாய தீயிடுதலைச் செய்தற்கு மனமிசைந்து இத்தண்டனைக்கு ஆளானான். இஃதொன்றே சமணரின் மனக்கொடுமையைக் காட்டுதற்குப் போதியதாம். மெய்யறிவினர் தங்குதற்கேற்ற வசதிகளைச் செய்து அறநெறியை வளர்க்கவேண்டுந் தனது கடமைக்குப் பதிலாக அரசன் அவர்கள் தங்குமிடத்தினையுந் தீயினாலழித்துவிடத் துணிந்தமையே, சமண்மதத்தினைப் பற்றிநின்று அவன் செலுத்திய ஆட்சிமுறை எத்தகையதெனக் காட்டும். பாண்டிய வம்சத்தின் கோடாத செங்கோல் இவனாற் கோடியதாலேயே அவர் குலமும் பழிக்குள்ளாயது.

தூயமனமும் மெய்யறிவும் பெற்ற அருளாளர்கட் கிழைத்த தீங்கானதாலும் இப்பிறவியில் அவன் வினை ஒழிந்து ஆட்கொள்ளப்பெறும் நற்பேறுடையனாயிருந்தமை யாலும் அவன் அத் தீவினையின் பயனை உடனுக்குடனாகவே பெற்றான். பொழுது விடிந்ததும் தேவியார் அன்றிரவு பாதகர் செய்த தீங்கினைக் கேட்டுச் "சிரபுரத்துப் பிள்ளையாரை இத் தீயவர் நாட்டிற்கு வரவழைத்த நாம் மாய்ந் தொழிவதே கடனு" மென மனம் மயங்கி அச்சம் மிகுந்து ஆருயிர் பதைத்தார். பின் திருமடத்திற்கோர் தீதுமில்லையெனத் தெரிந்து சிறிது ஆறுதல் பெற்றாரேனும், மெய்யடியார்க்கு விளைத்த இத் தீவினை எப்படி முடியுமோ என மனங்கவன்றனர். அந்நேரம் அரசனுக்கு வெப்பு நோய் வந்தடுத்ததாகக் கஞ்சுகிகள் உரைப்பக் கேட்ட தேவியார் பதைபதைத்தவராய்த் தன் தலைவனை அணுகினர்.

தீச்செயலின் பயனாக விளைந்த அரசனது வெப்பு நோயானது அருகி லெவரு மணைய முடியாத வண்ணம், அவனது உடல் நடுங்க உணர்வும் ஆவியுமொழிய அக்கினிச் சுவாலையாக வீசியது. மருத்துவர்கள் தங்கள் திறமையெல்லாங் காட்டியும் பயனற்றனர். அதன் வெப்பத்தை ஆற்றமாட்டாது பாண்டியன் கருத்தழிந்து உரை மறந்தனன். இதனை அறிந்ததும் சமணர்கள் நோயின் மூலகாரணத்தை அறியாது, தங்கள் மந்திரத்தை ஓதி மயிற்பீலியினாற் றடவினர். தமது குண்டிகை நீரினைத் தெளித்துக் காவாய் அருகனே! அருகனே! எனக் கதறினர். அவர்களின் செயல் எரிகின்ற தழலிற் சொரிகின்ற நெய்போல் மேன்மேலும் நோயை வளர்க்கவே, அரசன் அவர்களை நோக்கி "ஒருவரு மிங் கிருமருங்கு மிராது போம்" என்றுரைத்து உணர்வு சோர்ந்தான். பாண்டிமாதேவியாரும் நேற்றிரவு அமணர்கள் செய்த தீங்கு நமக்கு இவ்வாறாக முடிந்ததோவெனக் கரைந்தனர். அவர் இதன் முடிவு என்னவாமோவெனும் பேரச்சத்துடன் அரசனை வணங்கிச் "சமணர்கள் புகலிவேந்தர்க்குச் செய்த தீங்கே இங்ஙனம் வெப்புநோயாகி விளைந்தது. அவரே இதனைத் தீர்த்தற்குரியர். தமதுடலையும் மனதையுந் துப்புரவு செய்யாத சமணர்களா லிந்நோய் வளர்வதன்றி ஒழி

யாது. சந்திரனை அணிந்த சடாபாரத்தினையுடைய பெருமானிடஞ் சிவஞானத்தைப் பெற்ற பிள்ளையார் ஓர்முறை விருப்பத்துடனே நோக்குவாராயின் இப் பிணிமாத்திரமன்று பிறவிப்பிணியு மொருங்கே யொழியும்'' என மெய்யுணர் வளித்தனர். மனைவியார் கூறியதைக் கேட்ட அரசன் சமணர்களை நோக்கி, சைவத்தின் கீர்த்தியை வளர்க்கின்ற மாமறைச் சிறுவரது அருளால் எனது நோய் நீங்குமேல் தான் அவரது பெருமையை யறிவதாகக் கூறிய பின், அம்மையாரையும் அமைச்சரையும் நோக்கி யார் தனது நோயை நீக்குவதில் வெற்றி பெறுகின்றனரோ தான் அவர் பக்கஞ் சேர்வதாகவும அவரை அழைத்தற் குபாயமுண்டானால் அழைத்து வரும்படியுங் கூறினன்.

இதனைக் கேட்டதும வரம்பினை யுடைத்துப்பாயும் வெள்ளம்போற் கரைகடந்த ஆர்வமும் மகிழ்வுங் கொண்டு, அம்மையார் சிவிகையிலேறித் திருமடஞ் சேர்ந்தார். சேர்ந்தவர் ஆளுடைய பிள்ளையாரைக் கண்டதும, தான் வந்த காரியத்தையும் மறந்து, சமணர்கள் அவர்க்குச் செய்த தீங்கினை நினைந்தவராய உரைகுளறி மெய்நடுங்கிக் கண்ணீர் வெள்ளமாகப் பெருகத் தனது கவலைக் கடற்கோர் கரையினைப் பற்றினார்போல், அவரது பாதங்களைப் பிடித்துக் கொண்டு நிலத்திற் புரண்டு கிடந்தார். அதுகண்ட அண்ணலார் அவரைத் தமது திருக்கரங்களா லெடுத்தருளித் தேற்றிடவுந் தெளியாராகி நெடிதுயிர்த் தழிந்தார் தேவியார். அவரது ஆற்றாமையைக் கண்ட பிள்ளையார் அவர்பால் எய்தலுற் றீங்குளதோ என வினவலே அரசியார் கொடிய சமணர் செய்த வஞ்சனையானது மன்னவன்பால் வெப்பாகிய தெனவும் அரசன் முன்பாகவே அத்தீயோரை வென்றருளினால் தனதுயிரும அரசனதுயிரும் பிழைபெறுமெனவும் கூறினர். பிள்ளையார் யாவர் முன்னிலையிலும், அம்மையார் மகிழ்வெய்தும்படியாகத் தான் சமணரை வாதில் வென்று அரசனையும் வெண்ணீறு அணிவிப்பதாகவும், அதற்காக வருந்தவேண்டா மெனவுந் திருவாய்மலர்ந்தருளி, ஆலவா யிறைவனை ஏத்திச் சமணரை வெல்வதற்குத் திருவுளமாதல் வேண்டுமெனப் பதிகம் பாடி வணங்கியபின் தொண்டர் குழாத்தொடுங் கலந்து மந்திரியார் முன்னே செல்லவும், மணிச்சிவிகை மீதமர்ந்து

அம்மையார் பின்னே வரவும் அரண்மனை வாயிலை யணு
கினர். மந்திரியார் முதலிற் சென்று பிள்ளையாரது வர
வினைக் கொற்றவனுக்குத் தெரிவித்ததும் அவன், முழு
மணிக ளழுத்தப்பெற்ற பொற்பீடத்தைத் தன் தலைப்
பக்கத்தே அவர்க்கிடுமாறு பணித்துட், பின்னுஞ் சென்று
எதிர்கொள்ளுமாறு மந்திரியாரை ஏவினன். அவனது
செயலினைக் கண்ட சமணர்கள் மனங்கலங்கி "அரசே!
நமது சமயத்தை வளர்க்கும் முறை இதுதானோ? ஆனால்
அவரை இங்கே அழைத்தது அழைத்து விட்டாய். உனது
'அறநெறியை நீயே காக்கவேண்டுமானால், எம்மையும் அவ
ரோடொருங்கு உனது நோயைத் தீர்க்கும்படி செய்து அவ
ரே தீர்த்தாரெனினும் யாமும் தீர்த்தோமாகக் கூறுவாய்"
எனத் தம்மைத் தாமே நம்பாது பேசினர். இதுவரை
யில் அவர்களின் மதமே உண்மையானதென நம்பியிருந்த
கைதவனுக்கு இப்போது அதன் பொய்மை புலனாகவே,
அவன் இருதிறத்தாருந் தத்தம் தெய்வசார்பால தனது
நோயைத் தீர்க்கவேண்டுமெனவுந் தான் அதில் வஞ்சகம்
பேசமாட்டேனெனவும் அவர்கள் கூற்றை மறுக்கவே
அவர்கள் செய்வது தெரியாது திகைத்திருந்தனர். அப்
பொழுது நிலத்திடைப் பரந்த இருளினை நீக்குதற்கு
வானின்றிழிந்த முழுமதி போல, முத்துச்சிவிகை நின்றி
ழிந்து தன் எதிரே வரும் கவுணியர் தலைவனது திரு
மேனியை நேரே கண்ட அளவானே தனது வெப்புச்
சிறிது தணியப்பெற்ற வேந்தன், தனது தலைப்பக்கத்
திடப்பெற்றிருந்த பீடத்திலமரும்படி கையினாற் காட்டி
அவர் மேவும்பதி யாதென விருப்புடன் வினவினன்.
அதற்குப் பன்னிரண்டு திருநாமங்களையுடைய கழுமலமே
தமது ஊராகுமெனப் பதிகத்தால் விடையிறுத்துப் பீடத்
திலமர்ந்திருந்தார் சைவத்தலைவர்.

சமணர்கள் தமதுள்ளம் நிறைந்த பொறாமையாற்
கோபஞ் சிந்தக் கண்கள் சிவந்து, பாலசூரியனைச் சூழ்ந்து
மறைக்குங் கரிய முகிற் கூட்டங்களே போற் பிள்ளையாரைச்
சூழ்ந்து கொண்டு தாமாகவே தமது தற் கொள்கைகளைக்
கூறிக் குரைப்பதைக் கண்ட அரசியார் ஆற்றாராய் உளம்
கலங்கினர். அவர் தன் கணவனை நோக்கி "அரசே! எமது அ
ருள் வள்ளலார் மிகவும் பாலர். சமணர்களோ எண்ணில்லாத

வராய்த் திண்ணர்களாயுள்ளார்கள். எமக்கு வேண்டியது நோய் தீர்வதே. அதனை எமது அருள்வள்ளலார் தீர்த்தருள்வார். அதன்பின் இவர்கள் வல்லராயிற் பேசுவாராக'' என்றார். தேவியாரின் அச்சத்தினை உணர்ந்த மாறன் அவரை வருந்தாதிருக்கும்படி தேற்றிவிட்டுச் சமணர்களை நோக்கி "ஏன் வீண்வாதஞ் செய்கிறீர்கள்? எனது நோயைத் தீர்த்து உங்கள் தெய்வத்தன்மையை என்னிடத்துக் காட்டுவீராக'' என்றான். பிள்ளையாரது பால்மணம் மாறாப் பாலப் பருவத்தினையும், திண்ணிய உடம்பினராகிய சமணர்களின் கூட்டத்தையுங் கண்டு பெரிதும் அஞ்சும் அம்மையாரது உள் நடுக்கத்தை அறிந்த ஞானபோனகர் மனந் தாழாது "மானோக்கமைந்த விழியினையுடைய மாதரசே! என்னைப் பாலனென்று அஞ்சவேண்டாம். ஆலவாய் ஐயனது அருட்டிறத்தால் வஞ்சனை நிறைந்த இப்பாதகர்க்கு யான் எளியேனல்லேன் எனும் பொருளடங்கிய "மானினேர் விழிமாதராய்!" எனும் திருப்பதிகத்தைப் பாடி அவரை ஆற்றினர். அவர் அப்பதிகத்தில், உண்மைநெறி நிற்கும் மெய்யறிவாளர்க்குக் கடவுளின் அருள்விளக்க முண்டாமெனவும் அவ் அருளினையுடையார் எவரையு மஞ்சாது எதிர்க்கும் ஆற்றலரெனவும் வன்னெஞ்சர்க் கரியனாங் கடவுளி னருள்விளக்கம் பொய்மனம் படைத்த ஈனராஞ் சமணர்கட் கில்லையாதலின் அவர்களைத் தான் வெல்வது சத்தியமெனவும், பல உண்மைகளை அம்மையாரது மனம் அமைதியுறும் பொருட்டு விளக்கிக் காட்டியுள்ளார்.

சமணர்கள் தாம் அரசன இடப்பாகத்தின் நோயைத் தீர்ப்பதாக ஒப்புக்கொண்டு தம் மயிற்பீலியாற் றடவவே, மென்மேலும் வளரும் வெப்பத்தின் கொடுமையை ஆற்றமாட்டாது தென்னவன் சிரபுரச் செல்வரைப் பார்த்தான். அவனது பார்வையின் குறிப்பினையுணர்ந்த கழுமல வேந்தர் ஆலவா யண்ணலின் திருநீறே மந்திரமும் மருந்துமாகி அந்நோயைத் தீர்ப்பதாமென "மந்திரமாவது நீறு" என்னுந் திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டு, திருநீற்றினை அவனது வலப்பாகத் திட்டுத் தன் திருக்கையாற் றடவவே, அப்பாகந் தண்ணீர் நிறைந்த தடாகம் போலக் குளிர்ச்சி பொருந்தியது. சமணர்களின் மனம் நடுங்கவும்

உடல் கன்றவும் மயிற்பீலி தீயவு மிருபுறத்து வெப்பு மொன்றாக வாமபாகத்தைக் கொள்ளவே, உலகிலுள்ள தண்மையும் வெப்மையும் ஒவ்வோர் புறமாக ஒதுங்கிநின்றதை ஒத்தது மன்னனது மேனி. அவன் ஒரே காலத்தில் தன்னுடலொன்றில் நரகம் ஒருபாலும் வீட்டின்பமொருபாலும் கொடிய நஞ்ச மொருபாலும் சுவைக்கின்ற அமுத மொருபாலுமாக விளங்குகின்றதற்கு அதிசயித்தவனாய் "கொடுந் தொழிலில் வன்மைபெற்ற அருகரே! தோற்றீர்கள். என்னைவிட்டு நீங்குங்கள்" என அவர்களை அகற்றித் தனது நோயை முற்றாக நீக்கி அருளும்படி புகலிவேந்தரை வணங்க, அவருந் தன் திருமுகத்திற் பொலிந்த கருணையொடுந் திருநீற்றினைக் கையாற தடவி அவன் நோயை முற்றாகத் தீர்த்தருளினார். அம்மையார் அவரது பாததாமரைகளைத் தமது சென்னியிற் சேர்த்துப் "பெற்றனம் பெருமை யின்று பிறந்தனம் பிறவாமேன்மை உற்றனன் மன்னன்" என் றுளங்களிகூர்ந்து உவகை பொங்கி ஆனந்த பரவசராயினர். அரசன் தன் அழகிய கைகளைத் தலைமேற் கூப்பி வணங்கி "ஞானசம்பந்தர் பாதம் நண்ணி நான் உய்ந்தேன்" என்றான். தமது மந்திர வித்தைகள் பயன் தராது அழிய அஞ்சிய சமணர்கள் இனித் தர்க்க வாதத்தாற் தாம் வெற்றிபெறுவ தியலாதெனக் கண்டு வெற்றி கைகூடவல்ல வேறு வழிவகைகளைத் தேடுவாராயினர்.

நோய் தீர்த்தரும் பிள்ளையார் முன் குறித்தபடி சமணரது நூற் கொள்கைகளைப் பேசுமாறு கூறவே, அவர்கள் தர்க்க வாதத்தாலன்றி அவரவர் மத உண்மைகளைப் பிரத்தியட்சமாக நிறுவிக்காட்டுவதாக உரைத்தனர். அரசன் என்உடம்பு கன்றி ஒடுங்கக் கவர்ந்த வெப்புநோயை ஒழிக்க மாட்டாது தோல்வியுற்ற உங்கட்கு இனி என்ன வாதிருக்கின்றதெனத் தடுக்கவே, அவர்கள் அதனையே விருவாகக் கொண்டு தத்தம் நூற் பொருள்களின் உண்மையினை ஏட்டில் வரைந்து நெருப்பிலிட்டால் எது வெந்தழியாது விளங்குகின்றதோ அதுவே வெற்றியைப் பெற்றதாமென்றனர். அரசன் அதற்கெதிர் கூறத் தொடங்கு முன் பிள்ளையார் அவர்கள் கூறியபடி செய்தற்கு அரசன் முன்பாக வருப்படி அழைக்கவே அவர்களும் அணைந்த

னர். மன்னனுந் தன் அவை முன்னர்ப் பெருந்தீ அமைப்பித்தான். முத்தமிழ் விரகரும் கொழுந்துவிட் டெரியுந் தீயின் முன்பாக வந்து தனது சைவத் திருப்பதிகங்கள் கோக்கப்பெற்ற ஏட்டினைத் தலையிற் கொண்டு தொழுது காப்பினை அவிழ்த்துத் தன் திருக்கையால் மறிக்கவே நள்ளாறமர்ந்த நாதனைப் பாடிய "போகமார்த்தபூண் முலையாள்" எனும் பதிகம் வந்து நேர்ந்தது. கவுணியர் தலைவன் அப்பதிகத்தினை தம் மேட்டினின்றுங் கழற்றி நள்ளாற்றார்தம் நாமம் மிளிர்கின்ற இவ்வேடு வளர்ந்தெரியும் நெருப்பிலிடப்படின் பழுதடையாதென்ப துண்மையேயெனும் பொருளடங்கிய "தளரிள வளரொளி" எனுந் திருப்பதிகத்தைப் பாடிப் பாண்டியனின் பேரவையிலுள்ளார் யாவரும் காண மகிழ்வோடும் முதலிலிட்டார். மாதொரு பாகனாய் விளங்கும் இறைவனே முழுமுதற் பொருளாவனென்பதைப் புலப்படுத்தும் திருப்பதிகத்தைக் கொண்ட அவ்வேடு பச்சையாய் விளங்கியது. அமணருந் தம்பொருள் வரைந்து ஏட்டினை இது உய்யுமோ உய்யாதோ வெனுமையத்தினால் நடுக்கத்தோடும் நெருப்பிலிட்டு அது பஞ்சு போலெரிந்ததமை கண்டு பயத்தினால் நெஞ்சு சோர்ந்து நின்றார். பிள்ளையார் தாமிட்ட இந்தவேட்டினை முன்னையிலும் பசுமையும் புதுமையும் விளங்க யாவரும் வியப்புற எடுத்து அவையின் முன்பாகக் காட்டித் திரும்பவுந் தன்னேட்டினிற் கோத்ததும் அரசன் அதிசயித்துச் சமணர்களது ஏட்டினைக் காட்டும்படி கேட்டான். அவர் தம் மேட்டினை எடுப்பார்போல் நெருப்பின் அருகுறச்சென்று அதன் வெப்பத்தைத் தாங்கமாட்டாராய்ப் பின்னிடைவதைக் கண்ட மன்னன நீரினால் நெருப்பினைத் தணிப்பித்தலும் அங்கமணர்கள் சாம்பலுங் கரியுமன்றி மற்றொன்றுங் காணாராய்த் திகைப்பொடும் அச்சாம்பலைக் கையினாற் பிசைந்து தூற்றிப் பார்க்கவே, வேந்தன் பொய்யினால் மெய்மையயாக்கப் புகுந்தவர்களே! ஏட்டினை இன்னும் நன்றாக அரித்துப்பாருங்கள் என நகைத்து

"வெப்பெனும் தீயில் யான்முன் விடுபெற் றுய்ய நீங்கள்
அப்பொழு தழிந்துதோற்றீ ராதலா லதுவாறாக

இப்பொழு தெரியிலிட்ட ஏடுங்க ளில்லையென்றாற் றப்புரவுடை யீர்நீங்கள் தோற்றிலீர் போதுமென்றான்" அதற்கமணர் இன்னுமோர் முறை வாதுசெய்யின் மும் முறையிலோர் முறையேனும் தாம் வெற்றியடைவ துண் மையென விடையிறுக்க அதனை அரசன் மறுக்கவுஞ் சண்பைமன்னர் இனி என்ன வாது செய்வதென பன் ணனை வினவினர். அதற்கமணர் இரு பகுதியாரும் மெய்ப் பொருளின் உண்மையினை எழுதிய ஏடுகளை ஓடுகின்ற ஆற்றிலிட்டால் யாருடைய ஏடு நீரோட்டத்துடன் செல் லாது தங்கி நிற்கின்றதோ அதுவே யுண்மைப்பொருளி னைத் தெரிவிப்பதாமெனப் புகலிவேந்தரு மதற்கிசைந்தார். அப்பொழுது மந்திரியார் இவ்வாதினிற் றோற்றவர் என் செய்வதென்பதை நிச்சயித்த பின்னரே இனி வாது செய் தல் வேண்டுமெனக் கூற அமணர்கள் பிள்ளையார்மேற் பொங்கியெழுங் கோபமும் பொறாமையுமே காரணமாகத் தங்கள் வாய் சோர்ந்து, "இனிவாதில் அழிந்தோமாகில் வெங்கழுவேற்றுவா னிவ்வேந்தனே" என்றனர். வாதினைக் காண்டற்கு யாவரும் வையையாற்றின் கரையை அடைந் ததுமரசன் இருதிறத்தாரது ஏட்டினையும் ஆற்றில் விடும் படி பணித்தான். சமணர் உள்ளீடற்ற நெற்பதரேபோல் அத்தியாத்தி எனப் பொருளற்ற வெறுஞ் சொற்களை எழுதிய ஏட்டினை மிகவும் வேகமாகப் பாய்ந்தோடும் அவ் வாற்றில் விடுதலும் ஆறு அதனையு மீர்த்துக்கொண்டு கட லின்மேற் பாய்ந்தோடியது. மெய்யுணர்வில்லாச் சமணர் அதனை ஓடாது அணைப்பாரேபோற் கரையின்மிசைச் சிறிது தூரமோடிச் சென்றும் அது இவர்களை நட்டாற் றில் விடுத்துக் கண்களுக்கு மெட்டாது மறைந்துபோக வே அரசனதாணையில் வழுவமாட்டாது திகைத்தவராய்த் திரும்பினர். அச்சத்தினால் நடுங்குமுளத்தோடும் அரச னுக் கெதிராக வந்த அமணர் தமதச்சத்தினை யொளிப் பாரேபோற் பிள்ளையாரை நோக்கி "நீரும் உமது ஏட் டினையிட்டால் நடப்பதைப் பார்க்கலா" மெனவும் வேந்தன் பிள்ளையாரது திருக்குறிப்பை யெதிர் நோக்கி னான்.

சைவத் தலைவர் தரும நூல்களில் விதிக்கப்பட்ட ஒழு க்கமே உலகியல் ஒழுக்கமென்பதையும் சிவநெறியே உண்

DR. U.V. S...



மைநெறி யென்பதையும் அவர் அறியாராயினும் பாண்டியனுக் குணர்த்தும் நோக்கமாக "வாழ்க அந்தணர்" எனும் திருப்பதிகத்தைப் பலரும் உணர்ந்துய்யப்பாடி ஏட்டினில் வரைந்து தமது திருக்கையா லாற்றிலிட்டனர். அவரது திருக்கரத்தா லிடப்பட்ட ஏடானது பிறவியாகிய ஆற்றினை எதிர்த்தெதி ரேறிச் செல்லும் பெருந்தபோதனரின் தூய மனமேபோல், வைகையாற்றின் நீரினைக் கிழித்துக் கொண்டு நீரோட்டத்திற்கு எதிர்முகமாக முன்னேறி உலகிலுள்ளார்க்கு இதுவே உண்மைப் பொருளாமெனக் காட்டி விளங்கியது. அப்போது வானவர் வாழ்த்தி வணங்கிப் பூமாரி பொழிந்தனர். வேந்தனற்புதமெய்தி நின்றான். அமணரஞ்சிப் பதைத்தனர். ஆற்றின்மேற் செல்லுமேட்டினை எடுத்தற்குக் குலச்சிறையார் ஓர் குதிரையி லேறிக்கொண்டு பின்னூற் சென்றார். பிள்ளையார் "வன்னியுமத்தமும்" என்றெடுத் தேடுதங்கும்படி திருப்பதிகம் பாடியருள அவ்வேடு அம்மையப்பராயெழுந்தருளி ஆன்மாக்களை யாட்கொள்ளும் அருட்பெருமானின் திருக்கோயிலின் பக்கத்தே தங்கியது. மந்திரியார் அதனை யெடுத்துத் தலைமேல் வைத்துக்கொண்டு தம் மனதிற் பொங்கும் மகிழ்ச்சியுடன் கரையிலேறிச் சிவபெருமானது பதங்களை வணங்கியவராய் ஞானபோனகரிடம் வந்து அவரது பதங்களைப் பணிந்து தாம் கொணர்ந்த வேட்டினை யாவர்க்குங் காட்டவே தொண்டர் தம் ஆர்ப்பொலி மிகுந்தது. வேந்தன் மந்திரியாரை நோக்கி "வாதிற் றோல்வியுற்றதுமன்றி இவ்வமணர் முன்னரே பிள்ளையார்க்குப் பெருந்தீங்கிழைத் துள்ளனராதலால் இவர்களைக் கழுவிலேற்றி அரசியல் நீதியை வழுவாது நிலைநிறுத்துக" எனக் கூறவும் மந்திரியாரும் திருமடத்திற் றீயிட்ட அத்தனை சமணர்களையும் யாவரும் அறியக் கழுவேறச் செய்தார்.

சமணர்கள் எவர்க்குமோர் தீமையைக் கனவிலும் கருதாது சாந்த குணமும் அருளொழுக்கமும் பேரறிவும் படைத்த எத்தனையோ தூய தொண்டர்களைத் தீயிட்டுக் கொல்ல முயன்றதுவே, அவர்களை அரசனது தண்டனைக் குள்ளாக்கியது. தமக்குத் தீங்கினை விளைக்காத ஓர் அற்ப பிராணியையேனும் கொல்லுதல் கொடிய பாவமாகவும்,

MAHAMAHOPADHYAYA

ஆறறிவும் பெருகப்பெற்ற மக்களைப் பொறாமை காரணமாகப் பாவங்களுட் டலையாய தீக்கொழுவல் முதலிய கொடுஞ் செயல்களால் அழிக்க முன்வந்த அமணரின் மனக்கொடூரம பெரிதா யிருந்தமையினாலேயே அரசனவர்களைக் கழுவேறப் பணித்தான். விடம்மிக்க பாம்பினைக் கொன்றொழித்தல் அதனினும் மேலாய உயிர்களைக் காப்பாற்றும் பொருட்டேயாம். சாந்தகுணமிகக தீங்கற்ற பசுவினைக் கோறலே கொடும்பாவமாகக் கொள்ளப்பட்டது. நற்குணங்களினுந் தீக்குணங்களே நஞ்சம்போற் பரந்து விரைவாக வளர்வதில் வன்மைபெற்றதாதலின் தீநெறிகளை அழியாதுவிடின் அது அருள் நெறியைத் தலையெடுக்கவிடாது அமிழ்த்திப் பெருந்தீங்கையே விளைத்துவிடும். இதனாலேயே தீயனகளைந்து நல்லனநிறுவுதல் அரசநீதியாயிற்று. கொடியாரை ஒறுத்து நல்லாரைப் பரிபாலித்தலே செங்கோல்தவறா மன்னனின் நீதிவழுவா ஆட்சிமுறையாகும். நெற்பயிரின் வளர்ச்சியினைக் கெடுக்கும் புற்களைக் களைதல் எப்படி வேளாண்மைக்கு இன்றியமையாததோ அப்படியே கொடியாரைக் களைதலும் அரசிற்கு இன்றியமையாதது.

“கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களைகட் டதனொடு நேர்” என்பது தெய்வப் புலவரின் பொய்யாமொழியாம்.

அரசனுமதற் குடன்பாடா யிருந்தமையின் அவனும் அக் குற்றத்திற் குரியனன்றோவெனின், அவனது ஆராய்வின்மையே குற்ற முடைத்தன்றி அவன்செயல் குற்றமுடைத்தன்று. அவன் அந்நேரம் பேயினாற் பிடிக்கப்பட்டோர் அப்பேய் வசமாகுந் தன்மைபோல், சமணஅடிகளின் வசமாகவே தன் அரசியலை நடாத்தினான். அவனியல்பாகவே தீயோனல்லன். கூர்த்தறிவின்மையாற், பொய்யினை மெய்யாகத் திரித்துக் காட்டவல்ல சமணர்களின் வெளி வேடங்களால் ஏமாற்றமடைந்த ஒருவனாவான். அவன் உண்மையை உணர்ந்தவிடத்துப் “பொய்யினால் மெய்யையாக்கப் புகுந்த நீர் போமின்” எனக் கடிந்துள்ளான். அவன் அறத்தினை வளர்ப்பதில் மிகுந்த விருப்ப முடையனென்பது சமண் மதத்தினை அதற்கேற்ற நெறியாகவே கொண்டுள்ளதால் தெரிகிறது. அதனாலேயே

அவன் திரும்பவும் ஆட்கொள்ளப்பட்டான். சமணமே அறநெறி நிறுத்தும் உயர்மதமாக நம்பியிருந்த அவனுக்கு, மற்றைய மதங்களெல்லாம் பயனற்ற பொய் மதமாகத் தோற்றவே அதனை அகற்றவேண்டித், தமது தவத்தின் வலிமைகொண்டு மந்திரத்தாற் றீயினைத் திருமடத்திற் பற்றச்செய்யின் அவர்கள் அஞ்சித் தாமாகவே அகல்வரெனப் புத்தி புகட்டிய சமணர்களின் கூற்றை அவன் முற்றிலும் நம்பி அதற்கு இசைவாயினான். தம் மந்திரத்தாற் றீப்பற்றாமை கண்ட அமணர்கள் "வேந்தன் ஈதறியின் நம் மேன்மை உளங்கொள்ளான்; நமர் விருத்தியுமொழிக்கும்" என அஞ்சுவதாலதனை அறியலாம். இவர்கள் தீயினை எடுத்துப்போய் எத்தனையோ தூய தொண்டர்களைக் கொலைசெய்ய முயல்வாரென்பதை, இவர்களைத் தவத்தின்மிக்க பேரறிஞராக மதித்திருந்த அரசன் அறிந்ததில்லை. அடிகண்மார் தமது தவவலிமையைக் காட்ட அவர்கள் அதற்கஞ்சித் தாமாகவே அகல்வரென்பதே அவனதெண்ணம். இப்பொழுது தன் கண்முன்னாகவே பிள்ளையாரது உண்மை வாழ்வினையும் அருள் விளக்கத்தினையும், சமணர்களின் பொய்மையினையும் பாவச் செயல்களையும் கண்டுணர்ந்த அரசன், தன்னையும் ஏமாற்றி அருள் நெறிநிற்கும் உண்மைத் தொண்டர்களையுமழிக்கத் துணிந்த சமணர்களை ஒறுத்துத் தன் அரச நீதியை நிலைநாட்டினான்.

"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்" ஆதலின் கடவுளோடொப்ப நின்று அல்லவை நீக்கி அறத்தினை நிறுத்தி உயிர்களைப் பாதுகாக்குமுரிமையுடையனாய மன்னன் தன் நீதியினைச் செய்யுமிடத்து மற்றையோர் அதிற் றலையிடுதல் பெருந்தகைமையன்றாதலால் மற்றைய அருளாளர்களும் ஏதும் பேசாதிருந்தனர். அறிஞர் அரசனது ஆட்சி நீதி வழுவுமிடத்து அதனைக் கண்டித்து நல்வழிப்

படுத்துவதன்றி அவரின் அரசகாரியங்களிற் றலையிடுபவ ரல்லர். பிள்ளையாரை யெவ்விதமேனும் தொலைத்து விடல் வேண்டுமெனப் பொறாமைகொண்ட அமணர் மும்முறை யில் ஓர்முறையாயினும் அவர் தோல்வியுறுவரெனவும் அப்பொழுதவரைக் கழுவேற்றுதலே அதற்குத் தகுந்த ஆட்சியாமெனவு மெண்ணியே தோல்வியுற்றவர் கழுவேற வேண்டுமெனப் பொறாமையால் வாய்சோர்ந்து கூறித் தமது வஞ்சனையால் தாமே கழுவேறலானார். இவர்களே றின தம்பங் மலைமகளோர் பாகனாக விளங்குஞ் சிவபெ ருமானின் பரத்துவத்தை விளக்கும் வெற்றித்தம்பமாக விளங்கியது.

"தென்னவன் றனக்குநீறு சிரபுரச் செல்வ ரீந்தார்
முன்னவன் பணிந்து கொண்டு முழுவது மணிந்து நின்றான்
மன்னன்நீ றணிந்தா னென்று மற்றவன் மதுரை வாழ்வார்
துன்னிநின் றார்க ளெல்லாந் தூயநீ றணிந்து கொண்டார்"

பாண்டிநாடு முழுதுஞ் சைவ ஒளியே வீசியது. இதுவரை யிற் பரந்திருந்த சமணிருள் அகன்றது. யாவரதுளத் திலு மிறைவனது கருணைவெள்ளம் ததும்பி வழிந்தது. கோல்கோடி அல்லவை வளர்த்தான் பாண்டியகுலத் தொ ருவனெனும் குலப்பழியும் பாண்டி நாட்டினர் உண்மை யறிவிழந்த பொய் நெறியினரெனும் வசை மொழியும் அம்மையாரது அரும்பணியால் ஒருங்கே களையப்பட்டன. அரசனும் ......... "திருவால வாயில் மேவும் மன்னனே அமணர் தங்கள் மாய்கையால் மயங்கி யானும் உன்னை யானறிந்திலேனை உறுபிணி தீர்த்தாட் கொள்ள இன்ன ருட் பிள்ளையாரைத் தந்தனை இறைவ" என்றுளங்கரைந் துருகிப் பற்றற்ற தூய சிவதொண்டர்களுள் ஒருவராய், நின்ற சீர்நெடுமாற நாயனாரென எவரும் போற்றச் சிறந் தான். தன் கணவனின் மத மாற்றத்தால் அம்மையாரது மாசற்ற மனதிற் றோன்றிய அன்ப வுணர்வே, வேந்தனை

உண்மை யடியனுக்குப் பேரின்பம் பயக்கும் வீடுபேற்றிற்
குரியனுக்கியது.

இவர்களிருவருந் தம்மை யாட்கொண்ட பிள்ளையா
ரைப் பிரிய ஆற்றாராய்ச் சிலகால மவருடன் சேர்ந்து பல
பதிகளையும் வணங்கிக் கொண்டு சிவானந்தத்துட் டிளைத்
திருந்தார் பிள்ளையார் அவர்க்கு வேண்டிய கூறி ஆறுதற்
படுத்தி அன்பின் விடைபெற்றுப் பிரிந்தபின் பாண்டி
நாட்டி லுண்மைநெறி யோங்க அறிவொளி வீசத் தெய்வ
மணங் கமழப் பற்பல தொண்டாற்றி அருளொளுங் கோ
லாற் றம்மாசோம்பி அங்கயற்கண்ணி பங்கனின் திருவ
டிக்கீழ்த் தங்கினர். தென்னுட்டி லிருட்பிழம்பை யோட்
டிய அருட் டீபத்தின் தெய்வ ஒளி எம்மனோர் அகத்தெ
லாஞ் சுடர்ந்தொளிர அன்னவர்தம் செம்மலர்ப் பதங்க
ளைப் போற்றுவாம்.

அம்மையார் தம் பிறவிப் பெரும் பயனாகப் பொய்
நெறியின் கைதலைத்தா விறங்கொழிந்த தமிழகத்தி லுண்
மை நெறிக்குப் புத்துயிரளித்து அதனைச் செம்மையுற
வளர்த்த அருட் டாயாகியும் தான் புகுந்த குலத்திற் படி
ந்த மாசு போக்கித் தூய்மை செய்த மனைத்திருவாகியும்
கடமை ஆற்றியுள்ளார். மக்களின் அறிவை யுண்மை நெ
றியில் வளர்க்கும் தொண்டைத் தன் சிவதொண்டாகக்
கடைப்பிடித்து அதற் கிடர்வந்த காலத்தும் அதிற் சிறி
துந் தளராது இவ்விளமையில் உறுதியுடன் நின்று, தான் எடு
த்த பணியை முற்றுவித்த பெரியாரது பேராற்றலும்
அருள் விளக்கமுடைய வரம்பிகந்ததுவாம். சந்தனம் இல்லா
விடத்துத் தம் முழங்கையைத் தேய்த்தும் நெய்கிடை
யாத காலத்துத் தண்ணீர் முகந்து திருவிளக்கேற்றியும்
தத்தம் திருத்தொண்டுகளி லுறுதியாக நின்ற மற்றைய
தொண்டர்கள்போ லம்மையாருஞ் சைவத்தை வளர்த்த
லாகிய தன் திருத்தொண்டிற்கு அமைத்தா விடருற்ற

காலத்துந் தனது பெருந் தொண்டிற்குறுதியாக நின்றுள்ளார்.

ஆசிரியர் அத்தொண்டி லீடுபட்டு நின்றவர்கள் குலச்சிறையா ரென்றாவது அம்மையா ரென்றாவது பிரித்துக் காட்டா திருவரையு மொருங்கே கூறியிருப்பக் குலச்சிறையாரை விடுத்து அதனை அம்மையாரது தொண்டாகக் கொள்ளுதல் யாங்ஙனமெனின், குலச்சிறையார் அம்மையாரது தொண்டிற்குத் துணையா யிருந்தமை பற்றி ஆசிரியர் அவரையுஞ் சேர்த்துக் கூறினாரன்றி அதனை அவரது திருத்தொண்டாகக் கொண்டவரல்லர். ஆசிரியர் குலச்சிறை நாயனார் புராணத்தில் அவர் அடியார்க்கு இனியன கூறி விருந்தூட்டுந் தொண்டினையே சிறப்பாகக் கொண்டன ரென்பதைத் தெளிவாகக் காட்டியதுமன்றி

"பாண்டிமா தேவியார் மேய தொண்டிற்கு
மெய்த் தொண்ட ராயினார்" என அம்மையாரெடுத்துக் கொண்ட திருத்தொண்டிற்குத் துணையாக நின்றவ ரென்பதைப் பிரித்துக் காட்டியுமுள்ளார். பிள்ளையாரும் "வெற்றவே யடியா ரடிமிசை வீழும் விருப்பினன்" என அவரது தொண்டை வேறாகக் காட்டியுள்ளார். அம்மையாரது புராணத்தில் ஆசிரியர் "தங்கள் பொங்கொளி வெண் திருநீறு பரப்பினாரை" எனவும் தேவாரப் பதிகத்திற் சம்பந்தப்பிள்ளையார் "செங்கைமா வளவர்மகள் சேலன கண்ணாள் சிவன் திருநீற்றினை வளர்க்கும் பந்தணை விரலாள்" எனவு மவரது திருத்தொண்டைச் சிறப்பித் துள்ளார்கள். தேவியார் பாண்டி நாட்டினர் அமண் மதத்தி லமிழ்ந்த முன்னரே இத்திருத் தொண்டைக் கடைப் பிடித்த ஒருவரன்றிச் சமணத்தினின்றும் அவர்களை மீட்ட பின்னர் அதனு லத்தொண்டிற் குரியாராகக் கொள்ளப் பட்டவரல்லர். அவர் தான் கொண்ட திருத்தொண்டினாலேயே, சமணமாகிய பேரிருளிற் பட்டு மயங்கித்

தவித்த பாண்டி நாட்டினரை மீட்பதற்கு முன்வந்தார்.
பாண்டிநாட்டிற் கெழுந்தருளிய பிள்ளையார் மதுரை சேர்
ந்து திருவாலவாயெம் மருங்கினதெனக் குலச்சிறையாரா
லறிந்ததும் தொழுது பாடிய ஆலவாய்ப் பதிகத்தில்
சிவன் திருநீற்றினை வளர்க்குந் திருத்தொண்டையுடைய
தேவியாரெனக் கூறுவதா லவர் சமணம் பரவுதற்கு முன்
னரே யித்தொண்டையாற்றி வந்தவரென்பது தேற்ற
மாம். அம்மையார்க் கித்தொண்டிலிருந்த முனைப்பு முரி
மையுந் தோன்றவே, சைவமக்க ளெவர்க்கும் பொதுவாய
நீற்றினை ஆசிரியர் அரசியாரது உரிமையாக்கினர். சை
வத்தை வளர்த்தவ ரென்பதையே நீற்றினைப் பரப்பின
ரெனத் தன்னடையாளமாகிய நீற்றின் மேலேற்றிக்
கூறிய ஆசிரிய ரப்பணியி லுழைத்து நின்ற அம்மை
யார்க்கே யதனைத் தனி உரிமையாக்கினர். அன்றியும்
பாண்டிநாட்டி லில்லாது முற்றாக அழிந்துபட்ட
நீற்றினை அவரே திரும்பவும் புதிதாக விளங்கச் செய்தவ
ராதலி னவர்க்கே அது உரிமையாயது. இதனால் மற்
றைய அடியார்கள் சைவத்தை வளர்க்கவில்லை யென்பதும்
நீற்றி னுரிமையற்றவர்கள் என்பதும் கருத்தன்று. அறு
பத்துமூன்று மெய்யடியார்கட்கும் ஒவ்வோர் தொண்டு
அவ்வவர்க்குச் சிறந்து காணப்படுவதால் அம்மையார்க்குச்
சமயவளர்ச்சி யென்னுந் திருத்தொண்டே சிவதொண்டா
கச் சிறந்ததென்பதே கருத்தாம். பாண்டிநாட்டில் நீற்றினைப்
பரப்பிய பிள்ளையார்க்கும் அம்மையார்க்கும் அந்நீற்றினை
உரிமையாக்கியே ஆசிரியர் "தங்கள்" எனப் பன்மையிற்
கூறியிருக்க லாகாதோவெனின், அது அவர் கருத்தன்
றென்பது, அம்மையாரை வணங்கும் ஆசிரியர் நீற்றினைப்
பரப்பின ரம்மையாரெனக் கொண்டு. அவரது தொண்டா
கச் சிறப்பித்து அவரையே வணங்குவதாலும் பிள்ளை
யாரும் அதனைப் பரப்பினரெனக் கூறாமையாலும் தன
தெனும் பொருளில் "தங்கள்" எனுஞ் சொல்லை ஆசிரி

யர் பலவிடங்களிலும் வழங்குவதாலும் பெறப்படும். தனது திருநாடு என்பதற்குத் "தங்கள் திருநாடு" எனவும் தனது பிரான் என்பதற்குத் "தங்கள் பிரான்" எனவும், தனது குலத்தாதை என்பதற்குத் "தங்கள் குலத்தாதை" யெனவு மாசிரியர் வழங்குவதைப் பெரியபுராணத்துட் பரக்கக் காணலாம். ஆதலால் ஆசிரியர் "தங்கள் பொங்கொளி வெண் திருநீறு பரப்பினரை" என்பதிற் றனது ஒளி வீசும் வெள்ளிய திருநீற்றினைப் பரப்பினரை என, அம்மையாரைத் தாம் வணங்கு முகத்தால் அவரது தொண்டின் சிறப்பும் அவர்க்கு அதிலுள உரிமையுந் தோன்றக் கூறினரென்பதே சிறந்து விளங்கும்.

அரசியார் தன் திருத்தொண்டின் வழிநின்றே கணவனுக்கு ஆற்றவேண்டிய தன் கடமைகளையும் முடித்துள்ளார். அவர் தன் கணவன் சைவநெறிக்குத் திரும்பிய பின்னும் அவர்க்கு அந்நெறியில் வேண்டியவற்றிற்கு உதவியாக இருந்தாரென்பது "மாசில் புகழ் நெடுமாறன் தனக்குச் சைவ வழித்துணையாய் நெடுங்கால மன்னி" என்பதனாற் புலனாகின்றது. உண்டுடுத் தின்பமாரும் உலகவாழ்விற் பிறவியினை வறிதே கழியாது

"காலமுண் டாகவே காதல்செய் துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன் நண்ணரிய [க்கு
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்பிரான் தன் அடியவர்
மூலபண் டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே"

எனத் தன் நாட்டினர் யாவரையு மொருங்கே யழைத்து அருள்நெறிப் படுத்திய அம்மையாரது திருவடிகள் என்றும் வழுத்துதற் குரியனவாம்.

முற்றிற்று.